**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

| இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமம் 1 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் வதிவிடம் மற்றும் சட்டரீதியான வடிவம், நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் முதன்மைச் செயற்பாடுகளின் தன்மை விபரம் மற்றும் நிறுவனச் செயற்பாடுகளை நிர்வகிக்கும் பொருத்தமான சட்டக் குறிப்பு போன்ற பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1994 மார்ச் 09 இல் அரசாங்கத்தின் சார்பில் நிதியமைச்சின் செயலாளரால் கைச்சாத்திட்டப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியொன்றின் ஊடாக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (எவ்ரீஎவ்) ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் குழுவானது முன்னைய விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் அதே அமைச்சின் இராஜாங்க செயலாளர், விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அமைச்சின் செயலாளர், கமநல அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் நிதியத்தின் சார்பில் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோரை கொண்டிருக்கின்றது.
பல்வேறு விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக முற்பணங்கள், கடன்கள் மற்றும் மானியங்களை வழங்குதல் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முக்கிய தொழிற்பாடாகும். தேசிய லொத்தர் சபை கொவிசெத சீட்டிழுப்பின் போதான சீட்டிழுப்பு விற்பனை வருமானத்தில் 10 சதவீதத்தை நிதியத்தை அதிகரிப்பதற்காக விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சார்பில் பொதுத் திறைசேரியின் திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்திருந்தது. நிதியத்தின் நிதிசார் தேவைப்பாட்டின் பிரகாரம் பொதுத் திறைசேரியால் காலத்திற்குக் காலம் பணம் விடுவிக்கப்படுகின்றது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 775,000,000 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மீது ரூபா 29,750,390 தொகையான வட்டி குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்ததால் அதே தொகையால் பெறவேண்டிய வட்டி மற்றும் வட்டி வருமானம் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்த நிலையான வைப்புக்கள் மீதான வட்டியை வட்டி வருமானத்திற்கு எடுத்தல் தவிர்க்கப்பட்டமை. | மீளாய்வாண்டு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் இனங்காணப்பட்டு கணக்கிற்கு சரியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களிற்கான கணக்கீட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் கொவிசத சீட்டிழுப்புக்களிலிருந்தான வருமானம் ரூபா 4,181,413,741 ஆகக் காணப்பட்டதுடன் திறைசேரிப் புத்தகங்களின பிரகாரம் இது ரூபா 4,141,819,627 ஆகக் காணப்பட்டதால் ரூபா 39,594,114 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | தேசிய லொத்தர் சபையால் பொதுத் திறைசேரிக்கு காசோலைகள் வழங்கப்படுவதன் ஊடாக உரிய பணத்தை அனுப்புவதில் காணப்படுகின்ற தாமதங்கள் பொதுத் திறைசேரி புத்தகங்களின் பிரகாரமான மீதியில் ஏற்பட்ட குறித்த வீழ்ச்சிக்கு பங்களித்திருந்தது. | பொதுத்திறைசேரி மற்றும் தேசிய லொத்தர் சபை என்பவற்றின் மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்படக்கூடாது. |

### 1.5.4 பொருத்தமற்ற கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் நம்பிக்கைப் பொறுப்பு உரித்துறுதியின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகவும் சிறிய விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலன்களுக்காகவும் நிதியம் தொடங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 755,001,919 மற்றும் ரூபா 93,513,941 தொகைகள் மீளாய்வாண்டின் போது முறையே நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 131,781,727 தொகை மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அந் நிதிகளை போதுமானளவு பயன்படுத்துவதற்கு பதிலாக அவற்றிலிருந்து வட்டி வருமானமாக உழைக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது ரூபா 826,396,000 கிரயத்தில் 78 செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களில் ரூபா 197,400,112 கிரயமான 32 செயற்திட்டங்கள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 40,296,933 தொகை மாத்திரம் அவற்றுக்கான அபிவிருத்திச் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. | நிதியத்தின் பணம் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உரித்துறுதியில் குறிப்பிடப்பட்ட தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுகின்றதுடன் அச் செயற்திடடங்கள் வருடாந்த மதிப்பீடுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்படுகின்றன. அதற்கிணங்க பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்காக விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக கடன்கள், மானியங்கள் மற்றும் முற்பணங்களாக பணம் விடுவிக்கப்படுகின்றது. பல செயற்திட்டங்களிற்காக கொவி சக்தி கடன் திட்டத்தின் ஊடாக பல்வேறு விவசாய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டிருந்ததால் 2019 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ஏற்பட்ட செலவினங்கள் குறைவடைந்திருந்தன. ஆகையால் விவசாயம் ஊடாக அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. | கொவி சக்தி கடன் திட்டத்திற்கு கடன்களை வழங்குவதற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உரித்துறுதியின் தொழிற்பாடுகளுக்காக நிதியத்தின் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றின்மை

2002 ஆம் ஆண்டில் சுழற்சி நிதியம் மற்றும் விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை ஒன்றிணைப்பதன் மூலம் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட போது வழங்கப்பட்ட பின்வரும் 02 சொத்துக் கணக்குகள் மற்றும் பங்குரிமைக் கணக்கு என்பவற்றின் மீதிகள் தொடர்பான எழுத்துமூலமான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கடன்பட்டோர் | 9,603,076 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வு | இம் மீதிகள் நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்ததால் இம் மீதிக்காக கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வு ஒன்று தயாரிக்கப்பட முடியாதிருந்தது. குறித்த மீதிகள் 2002 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்தில் எதுவும் காணப்படவில்லை. | பல ஆண்டுகளாக இம் மீதிகள் காணப்படுவதால் அவற்றைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விவசாயிகளின் வைப்புக்கள் | 697,644 | விபரமான வைப்புப் பதிவேடு | நிதியத்திற்கு மாற்றப்பட்ட மீதியொன்று காணப்பட்ட போதிலும் விபரமான வைப்புப் பதிவேடுகள் நிதியத்தில் காணப்பட்டிருக்கவில்லை. மீதியொன்று மாத்திரம் கணக்கறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (இ) | பங்குரிமைக் கணக்கு | 591,965 | பங்குதாரர் பதிவேடு | நிதியத்திற்கு மாற்றப்பட்ட மீதியொன்று காணப்பட்ட போதிலும் பங்குதாரர் பதிவேடொன்று நிதியத்தில் காணப்படவில்லை. மீதியொன்று மாத்திரம் கணக்கறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 26,035,319 கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்படாமல் 03 ஆண்டுகள் தொடக்கம் 18 ஆண்டுகள் வரையான | அமைச்சு அலுவலக உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்று அதன் பரிந்துரைகளின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபையின் | எதிர்காலத்தில் இம் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| காலப்பகுதிக்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | அங்கீகாரத்தைப் பெற்று இம் மீதி பதிவளிக்கப்பட்டிருந்தது. எனினும் இம் மீதிகள் அவ்வாறு பதிவழிக்கப்பட முடியாதென பொதுத் திறைசேரி அறிவித்திருந்ததுடன் அதன் தீர்மானத்தின் பிரகாரம் இம் மீதிகள் கணக்கறிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றின் மூலமாவது இம் மீதிகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 59,348,755 மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 70,160,142 ஆக இருந்தமையால் மிகையில் ரூபா 10,811,387 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அபிவிருத்தி தொடர்பான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) பிணையொன்று பெறப்படாமல் Carbonic Red Lady பப்பாசிப் பயிர்செய்கைக்காக மொரகொலிகமவில் விவசாயி ஒருவருக்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,000,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லையென களப்பரீட்சிப்பு அறிக்கையின் போது அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் வரையிலும் கடன் தவணைப்பணத்தை அறவிடுவதற்கு நிதியம் தவறியிருந்ததுடன் விவசாய வங்கியால் பெறப்பட்ட ரூபா 150,000 | செயற்திட்டத்தால் பெறப்பட்டிருந்த கடன் செலுத்தப்படாதமை தொடர்பாக விவசாயிகள் பிணக்குத்தீர்த்தல் சபைக்கு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் கடன் தவணைப்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு 12 மாத காலப்பகுதியொன்று வழங்கப்பட்டிருந்தது.<br><br>தவணைப்பணங்கள் தற்போது வரை செலுத்தப்பட்டிருக்காததால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. | கடன் தவணைப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைப்பொன்று மாத்திரம் நிதியத்தால் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நுவரெலியா மாவட்டத்திலுள்ள வலப்பனேயில் உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கை செயற்திட்டத்திற்காக 24 மாதங்களினுள் தீர்ப்பனவு செய்யும் உடன்படிக்கை தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 500,000 தொகை செயற்திட்டத்தின் உரிமையாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. குறித்த செயற்திட்டம் வெற்றிகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் செயலாற்றல் அறிக்கை வெளிப்படுத்தியிருந்ததுடன் இதனால் மிகுதித் தொகை விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் நிதியம் ரூபா 500,000 கடனையும் அதன் மீதான வட்டியையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 1,000,000 தொகை செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 500,000 தொகை முதலாவது தவணைப்பணமாக வழங்கப்பட்டிருந்தது. முதலாவது தவணைப்பணத்தைப் பயன்படுத்தி வேலையின் போதியளவு பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் இரண்டாவது தவணைப்பணம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. கடன்களை தீர்ப்பனவு செய்வதற்கான காலப்பகுதி தற்போது கடந்திருந்ததால் இது விவசாயிகள் பிணக்குத்தீர்த்தல் சபைக்கு குறிப்பிடப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இறுதித் தீர்மானத்தை அடைந்து கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. | கடன் தவணைப்பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது அவை தொடர்பான சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018/2019 ஆம் ஆண்டின் Global Cap Certification Process இன் பிரகாரம் பொலன்னறுவை மாவட்டம் முழுவதும் அமைந்துள்ள 3000 ஏக்கர் நெற்காணிகளை பயிரிடுதல் மற்றும் சர்வதேச நியமப்படுத்தல் முறைகளை விவசாய சமுதாயத்திற்கு தெரியப்படுத்துவதன் | விசேட குழுவொன்றின் மூலம் இது தொடர்பாக களப்பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பான அறிக்கைகள் எதிர்கால நடவடிக்கைக்காக பணிப்பாளர் சபைக்கு குறிப்பிடப்படும். | உரிய பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மூலம் பொருளாதார ரீதியாக நலன்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் சுற்றாடல் நட்புரீதியான நிலைபேறான விவசாய முறையை பின்பற்றும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ரண் கெவிலிய சோசியல் என்ரபிறீனியர் பொதுக் கம்பனிக்கு ஓராண்டுக் கொடுப்பனவு அடிப்படையில் ரூபா 5.9 மில்லியன் வட்டியில்லாத கடனொன்று வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட கால எல்லையின் பிரகாரம் 2019 மார்ச் அளவில் பெண் விவசாயிகளின் நெல் உற்பத்திக்காக GAP (Good Agriculture Practice) சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை பெண் விவசாயிகள் அடைந்திருக்காததுடன் நிதியத்தால் வழங்கப்பட்ட கடன் தற்போது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிரந்தர பதவியணியொன்று காணப்படாததன் காரணமாக கடன்களை அறவீடு செய்வதிலுள்ள அதிகுறைந்த செயன்முன்னேற்றம், முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காத போதிலும் மீண்டும் மீண்டும் முற்பணங்கள் வழங்கப்படுதல், கடன்களை அறவீடு செய்வதிலுள்ள தாமதங்கள், அறவீடு செய்ய முடியாத கடன்களை பதிவழித்தல் போன்ற | இவ் அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. காலத்திற்குக் காலம் அமைச்சரவை மாறுவதன் விளைவாக அதிகாரச்சட்டத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை இறுதியாக்குதல் சாத்தியமற்றுள்ளது. அதிகாரச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் முறையான ஆட்சேர்ப்பு திட்டமொன்றை உருவாக்கி நிரந்தரப் | நிரந்தர பதவியணியொன்று நியமனம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| காரணங்களினால் நிதியத்தின் நிதி முகாமைத்துவம் வெற்றிகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | பதவியணியொன்றை நியமனம் செய்வதற்கு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. | |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03(ஆ) பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விவசாய அமைச்சு, மாவட்டச் செயலகங்கள், மாகாண விவசாய அமைச்சுக்கள் என்பவற்றுக்கு சொந்தமான திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கி விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மதிப்பீடு தயாரிப்பதற்காக வருடாந்தம் செயற்திட்ட முன்மொழிவுகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதுடன் அவற்றில் தெரிவு செய்யப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது ஆண்டு முழுவதும் அமுல்படுத்தப்படுகின்றன. இதனால் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று வருடாந்தம் தயாரிக்கப்பட வேண்டும். |